விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 25
ஒலி 263 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 22 சனிக்கிழமை (07.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழில் சோலர் மின்னிணைப்பு அனுமதியில் மோசடிகள்

### ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுன்னாகத்தில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் பிராந்திய பொறியியல் காரியாலயத்தில் இருந்து சோலர் மின்னிணைப்புக்கான அனுமதி வழங்கப்படுவதில் முறைகேடுகள் இடம்பெறுவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஜனாதிபதி செயலகத்துக்குப் பல முறைப்பாடுகள் 15

### யாழ்.போதனாவில்

## மயங்கி விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கிளினிக்கில் வரிசையில் நின்ற ஒருவர் மயங்கிச் சரிந்து 15

### நாட்டிலுள்ள இனவாதம்

## என்னை ஜனாதிபதியாக வரவிடாது - அரியநேத்திரன்

(மூதூர்)



இம்முறை நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் நான் ஜனாதிபதியாக வரப்போவதில்லை எனவும் இந்நாட்டில் உள்ள இனவாதம் அதனை விடாது எனவும் ஜனாதிபதி 15

## அஞ்சல் மூல வாக்களிப்பு 80 சதவீதம் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு, 80 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், உத்தியோகபூர்வமாகத் தேர்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் பணி 30 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும் 15

# இலங்கையில் நடைபெற்றது தமிழினப் படுகொலை

- மேல் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு
- இலங்கை அமைப்பின் மனு நிராகரிப்பு

*(ஒன்ராரியோ)*

இலங்கையில் நடைபெற்றது தமிழினப் படுகொலை என கனடா தெரிவித்தமைக்கு எதிராக இலங்கையைச் சேர்ந்த குழுக்கள் தாக்கல் செய்த மனுவை நிராகரித்த கனடாவின் மேல்முறையீட்டு நீதிமன்றம், இனப் படுகொலை எனத் தெரிவித்தது கனடாவின் அரசமைப்புக்குட்பட்டது எனத் தெரிவித்துள்ளது.

*(04ஆம் பக்கம் பார்க்க)*

### சண்டிலிப்பாயில்

## தோட்ட வேலைக்கு சென்றவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தோட்ட வேலைக்காகச் சென்றவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுலேந்திரன் 15

### வரலாற்றில் முதல் தடவையாக

## ஒரு டிரில்லியன் ரூபாய் சுங்கத்துக்கு வருமானம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான எட்டு மாதத்திற்குள் ஒரு டிரில்லியன் ரூபாய் சுங்க வருமானம் கிடைத்துள்ளதாகச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுங்கத் திணைக்கள வர 04

## ஜனாதிபதி வேட்பாளர் ஏனைய வேட்பாளருக்கு பிரசாரம் செய்யத் தடை

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)


ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் ஏனைய வேட்பாளர்களுக்காக பிரசாரம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்தில், இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் சட்டத்திற்கு புறம்பானது மட்டுமன்றி நெறிமுறையற்ற செயல்களாகவே இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த வேட்பாளர்கள் என்ன செய்கிறார்கள்என்பதைப்பொது மக்கள் அறிந்திருக்கிறார்கள், எனவே பொதுமக்கள் தாங்களாகவே முடிவு செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

பொதுத்துறையின் சம்பள திருத்தம் 15

அதிமேதகு ஜனாதிபதி கௌரவ
ரணில் விக்கிரமசிங்ஹ அவர்களின் தலைமையில்
செப். 07
மாபெரும் தேர்தல்
பிரச்சாரக்கூட்டம்
காலம்: 07.09.2024 சனிக்கிழமை
நேரம் : பி.ப. 1.00 மணி
இடம்: சங்கிலியன் பூங்கா
(முத்திரை சந்தி, யாழ்ப்பாணம்)
இலங்கையில் புகழ்பூத்த
இசைக்கலைஞர்களுடைய
இன்னிசை நிகழ்வும் நடைபெறும்.
அனைவரும் கட்சி பேதமின்றி
அணிதிரளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
-ஏற்பாட்டுக்குழு-

ரணில் விக்கிரமசிங்ஹ
(C-011)

## மோ.சைக்கிளிலிருந்து கீழே விழுந்தவர் மரணம்

### சங்கரத்தையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தைப்பகுதியில்மோட்டார்சைக்கிளிலிருந்து கீழே விழுந்து படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கதிரன் நடராசா 15

## வட்டுக்கோட்டையில் மோ.சைக்கிள் விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை, கணவத்தைப்பகுதியைச்சேர்ந்த நடராசா (வயது-65) என்பவரே உயிரிழந்த 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 08.08.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் சித்தப்பா

## அமரர் ஆழ்வான் குமரேசு

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 07.09.2024 சனிக் கிழமை காலை 5.30 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடை பெற்று அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்

(C-1134)

கூவில், புலோலி தெற்கு,
பருத்தித்துறை.

தகவல் : கந்தசாமி குடும்பத்தினர்
077 925 7443


# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன்
110 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்கஉகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சீரான ஆவணங்கள்
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

077 623 4204/ 077 030 2523

(1882)

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சக வாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில்

விமல்ராஜின்

# எழில்



குறும்படம் (22 நிமிடம் )-திரையிடலும் கலந்துரையாடலும்

காலம் - 08.09 2024 (ஞாயிறு)

இடம் - "ஈழத்திரை"
செல்வா மினி திரை அரங்கு,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நேரம் - காலை 10 மணி

எழில் குறும்பட பேசு பொருள் மற்றும் ஈழ சினிமா கலைஞர்களின் படைப்புக்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறும் ஈழ சினிமா ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்

அனுமதி இலவசம்


SCOPE Strengthening Social Cohesion and Peace in Sri Lanka

german cooperation

giz

(C-1133)


# மரண அறிவித்தல்



## முருகேசு தனபாலன்

(முன்னாள் கணித ஆசிரியர் - சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி, ஓய்வுநிலை உத்தியோகத்தர் - சுகாதாரத் திணைக்களம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவன் )

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தனபாலன் அவர்கள் 05.09.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கனகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தங்கராசா - சிவஞான சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற கோசலா (இளைப்பாறிய ஆசிரியை - யா/ சென்ஜோன்ஸ் பொஸ்கோ, திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும் தனுசலா(UK), சிவனுஜா(UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் சஞ்சு(UK), கபிலன்(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவபாலன்(ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற தேவபாலன்(ஜேர்மனி), குணபாலன்(UK), சந்திரபாலன்(சுவிஸ்), ஜீவச்சந்திரமணி (இலங்கை), சுந்தரபாலன்(UK), காலஞ்சென்ற கிருஷ்ண பாலன்(இலங்கை), நந்தபாலன்(நோர்வே), விஜயபாலன்(UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜராஜேஸ்வரி, ராஜகுலதேவி, கௌரி, ராஜேஸ்வரி, ஞானதேசிகன்(ஓய்வுநிலை பிரதி அதிபர் - யா.இ.க), கமலவதனி, பிரசாந்தினி, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும் டனிஸ்(UK), கிறிஸ்(UK), அனனிகா(UK) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(1877)

இல.7, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

076 250 5653

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரர்களின் போர்- 2024

## யா/மகாஜனக்கல்லூரி



### மகாஜனக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

2001 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுவரும் வீரர்களின் போர் துடுப்பாட்டப் போட்டி இம்முறையும் நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றேன். 2021-2022 இரு வருடங்கள் கொரோனா தொற்று காரணமாகப் போட்டிகள் நடைபெற்றிருக்கவில்லை. இம்முறை 22ஆவது போட்டியாக நடைபெறவுள்ளது. கிராமப்புற இளைஞர்களிடையேயும் துடுப்பாட்டத் திறன்களை வளர்க்கும் நோக்கோடு இரு பாடசாலைச் சமூகத்தினரும் இணைந்து இப்போட்டிகளை ஆரம்பித்திருந்தனர். வீரர்களிடையே புரிந்துணர்வு, ஆரோக்கியமான போட்டித்தன்மை, இலக்கைநோக்கி நேர்வழியில் நகர்தல் என்பவற்றை இவ்வாறான விளையாட்டுக்கள் உருவாக்கி அவர்களை ஆளுமைமிக்கவர்களாக வளர்த்து விடுகின்றன. இவ்வகையில் இரு அணி வீரர்களும் கடந்த காலங்களில் மிகச் சிறப்பாக இப்போட்டியில் விளையாடி வருகின்றார்கள். அதுமட்டுமன்றி இரு பாடசாலை சமூகத்தினரும் ஒழுங்கு, கட்டுப்பாட்டோடு இப்போட்டிகளை ஒழுங்கமைத்து வெற்றிகரமாக நிறைவுசெய்து வந்துள்ளனர். இப்போட்டிகளை சிறந்த முறையில் நடாத்துவதற்கு பழைய மாணவர்கள், நிதி அனுசரணையாளர்களின் பங்கு இன்றியமையாதது. அதோடு இப்போட்டிகளின் போது காவற்துறையின் பங்களிப்பும் நன்றிக்குரியது. இதுவரை காலமும் மிகக் கட்டுக்கோப்பாக நடைபெற்ற இச்சமர் எதிர்வரும் காலங்களிலும் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

**திரு.இ.புஸ்பரட்ணம்,**
**அதிபர், யா/மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பளை.**



K. Kowthaman, S. Thishankan, T. Abishanth, M. Mohamedrilan, K.Arjithan, S.Kajith, S.Aparnan, U. Jowelroshan, U. Thulasikan, J. Woshingtan, N. Kokulan, U. Tharanikan, M. Lakeesan,S. Ragasiyan, Mr.N.Thilakaraj,(P.O.G.) Mr.R.Vignamohan (Teacher in Charge), Mr.V. Chandrasekar (Team Manager), K.Thuvarakan (Captain), Mr.R. Pushparatnam ( Principal), S.Sumiskaran (Vice Captain), Mrs.Nalayini Sanjeepan (Deputy Principal), R.Mathusan (Coach)

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி



### ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச்செய்தி

சைவப் பாரம்பரிய மரபுப்படி உருவாகிய ஸ்கந்தா மற்றும் மகாஜனக் கல்லூரிகளுக்கிடையிலான 22ஆவது துடுப்பாட்டப் போட்டிகள் 2024 இற்குரியவை 07.09, 08,09.2024 ஆகிய இருதினங்கள் நடைபெற உள்ள இவ்வேளையில் இரு கல்லூரிகளின் நூற்றாண்டுகால ஒற்றுமை மற்றும் சிறப்புக் களையும் எல்லாம் உருவாக்கி இன்றும் அதே சிறப்புக்கமைய இரு கல்லூரிகளும் ஒன்றிணைந்து இப்போட்டியை நடாத்துவது காலத்தின் தேவை ஒன்றாகும்.

அந்தவகையில் இப்போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் ஒற்றுமையுடனும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடனும் செயற்படுவது போற்றுதற்குரியது.

ஸ்கந்தா, மகாஜன என்றால் இரு கல்லூரிகளின் பழைய மாணவர்களும் கலந்து சிறப்பிக்கின்றமை பெருமை கொள்கின்ற விடயமாகும்.

அந்தவகையில் இவ்வருடமும் வீரர்களின் போர் துடுப்பாட்டப்போட்டி மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நிறைவேறவும் மற்றும் அணி வீரர்களும் தங்கள் ஆற்றல்களை வெளிக்காட்டித் தங்கள் தங்கள் கல்லூரியின் சிறப்புக்கு செயற்பட எல்லாம் வல்ல ஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**மு.செல்வஸ்தான்**
**அதிபர்,ஸ்கந்தவரோதயக் கல்லூரி,கந்தரோடை,சுன்னாகம்.**




**Standing** (L.R) S.Vasikaran, V.Ronvith, S.Tharmilan, K.Nilakshan, N.Stephan, N.Nikesan, M.Piranavan, K.Seeralan, L.Kajanan, S.Kirushi kesan, P.Danilo, T.Abisek, N.Alex, K.Nithushan, M.Mathusiyanth **Seated Left to Right** Mr.T.Venthakumar(under 13master in charge ), Mr.S.Suthakaran(under 15master in charge ),Mr.V.Umasuthan (cricket co-Ordinator),S.Kethusan (captain), Mr.S.Selvasthan (principal), K.Dilaxshan(vice captain),Mrs.N.Paraneetharan(sports secretary) Mr.K.Vishnupirakash (under 19 master in charge), Mr. S.Sathees (coach)

வலிகாமத்தில் பெரும் துடுப்பாட்டப் போட்டியாக வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதும் வீரர்களின் போர் துடுப்பாட்டப் போட்டி 2024 யா/மகாஜனக்கல்லூரி மைதானத்தில் இன்று (07.09.2024) ஆரம்பமாகின்றது. இரு நாட்கள் நடைபெறும் இப் போட்டியானது இம்முறை 22 ஆவது போட்டியாக ஆரம்பிக்கின்றது. கிராமப்புறத்தில் துடுப்பாட்டத்தை வளர்க்கும் நோக்கத்துடன் இரு கல்லூரிச் சமூகத்தவர்களாலும் 2001 ஆம் ஆண்டு இப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. 2021, 2022 களில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்றுநோய், பொருளாதார நெருக்கடி காரணமாக நடைபெறவில்லை. இது வரை நடைபெற்ற 21 போட்டிகளில் யா/மகாஜனக்கல்லூரி 5 போட்டிகளிலும், யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி 4 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 12 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சம நிலையில் முடிவடைந்துள்ளன.

கிராமப்புறச் சிறார்களுக்கு துடுப்பாட்டத்தின் மேல் ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாகவும் அவர்களது திறமைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் நோக்குடனும் ஆரம்பிக்கப்பட்ட வீரர்களின் போர் தொடர்ந்தும் வீறு நடையுடன் நடைபெற அனைவரது ஒத்துழைப்பையும் இரு கல்லூரிச் சமூகமும் நாடி நிற்கின்றது.



### மகாஜன அணித்தலைவரின் சிந்தனை

2001ஆம் ஆண்டிலிருந்து இரு பாடசாலைகளுக்கிடையேயான துடுப்பாட்டப்போட்டி மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் நடைபெற்று வருகின்றது. இம் முறை 22 ஆவது போட்டியாக இது அமைகின்றது. விளையாடுகின்ற அணிகள் வெற்றியை இலக்காகக் கொண்டு விளையாடுவது இயல்பு. நாமும் வெற்றியடைய வேண்டும் என்ற நோக்கத் துடனேயே இருக்கின்றோம்.

ஸ்கந்தா அணியும் பலமான அணியே, அவர்களும் வெற்றிக்காகவே விளையாடுவார்கள், போட்டி பல மானதாகவே அமையும் என்பது எமது எதிர்பார்ப்பு. துடுப்பாட்டத்தில் ஆட்டத்தின் போக்கு திடீரென மாற்றமடையலாம். நிதானமும் விவேகமுமே எம்மை வெற்றிக்குக் கொண்டு செல்லும். அணிவீரர்கள் எல்லோருமே ஒரே சிந்தனையில் விளையாடி வெற்றிக்காக உழைப்போம்

**கே.துவாரகன், அணித் தலைவர்,**
**யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை**



### ஸ்கந்தா அணித்தலைவரின் சிந்தனை

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான 22ஆவது துடுப்பாட்ட நிகழ்வு எதிர்வரும் 7,8 ஆம் திகதிகளில் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. 22ஆவது துடுப்பாட்டப் போட்டிக்கு அணித்தலைமைப் பொறுப்பை ஏற்று செயற்படுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எமது அதிபர் கிரிக்கெட் இணைப்பாளர், அணிப்பொறுப் பாசிரியர், பயிற்றுவிப்பாளர் ஆகியோரின் சிறந்த வழிப்படுத்தலில் எமது அணி தயாராகி உள்ளது. எமது கல்லூரி அணி வீரர்கள் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்படக்கூடிய வீரர்கள் என்பதால் நான் பெருமையடைகிறேன். வெற்றியையும் தோல்வியையும் சமம் என மதித்து இரு கல்லூரிகளுக்கும் இடையிலான நட்புறவை வளர்ப்பதே இத்துடுப்பாட்ட நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். இப்போட்டி சிறப்பாக நடைபெற எமது கல்லூரி வளாகத்தில் குடி கொண்டிருக்கும் ஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.


**எஸ்.கேதுசன், அணித் தலைவர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி,**
**கந்தரோடை,சுன்னாகம்.**

**விளம்பர அனுசரணை-**

மெடிக்கல் சிற்றி
YOUR FAMILY PHARMACY
MEDICAL CITY
K.K.S Road, Tellippalai.
021 224 4949, 077 050 2513
වෛද්‍ය නගරය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் வீராங்கனைகளுக்கு கௌரவிப்பு



முல்லைத்தீவில்தேசியகுத்துச் சண்டை, துவிச்சக்கர வண்டி போட்டிகளில் பதக்கங்களைப் பெற்ற மாவட்ட வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர்.

விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் தேசிய குத்துச் சண்டை போட்டியில் வடமாகாணம் சார்பாக பங்கு கொண்ட முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகள் கே. இந்துகாதேவி, எஸ். யஷ்மிதா இருவரும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று வடமாகாணத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர். இவர்களுடன் என். ராதிகா கடந்த வருடம் தேசிய துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றிருந்த நிலையில் இவ்வருட தேசிய போட்டியில் 4ஆம் இடம் பெற்றுள்ளார்.

இச் சாதனைகளை நிகழ்த்திய முல்லைத்தீவு வீராங்கனைகளுக்குச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலாளர் சி.குணபாலன் தலைமையில் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (நி-350)

## ஒரு டிரில்லி...

லாற்றில் முதல் தடவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் 2024ஆம் ஆண்டிற்கான சர்வதேச நாணயநிதியத்தினால் நிரணயிக்கப்பட்ட 1.5 டிரில்லியன் ரூபாய் வருவாய் இலக்கை அடைந்து கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## இலங்கையில்...

கனடா நீதிமன்றம் இனப்படுகொலை கல்விவாரச்சட்டம் கனடாவின் அரசமைப்பிற்கு உட்பட்ட விடயம் எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து இலங்கை கனடா செயற்பாட்டு கூட்டமைப்பு என்ற அமைப்பு இதற்கு எதிராக மேல்முறையீடு செய்திருந்த நிலையிலேயே மேல்முறையீட்டு நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

கனடா அரசாங்கம் தனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் செயற்படுகின்றது, கருத்துச்சுதந்திரம் சமத்துவ உரிமைகளை மீறுவதாகத் தெரிவித்திருந்த இலங்கை அமைப்பு தமிழ் இனப்படுகொலை குறித்த மாற்றுக்கருத்துக்களை முடக்குவதற்காக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் எனத் தெரிவித்திருந்தது.

எனினும் அந்த அமைப்பின் வேண்டுகோளை நிராகரித்துள்ள ஒன்ராரியோ மேல்முறையீட்டு நீதிமன்றம் இனப்படுகொலை கல்விவாரச்சட்டம் கனடாவின் அரசமைப்பிற்குட்பட்டது அது பாரபட்சமான தாக்கங்களை ஏற்படுத்தாது எனத் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டம் சிங்களபௌத்தர்களிற்கு எதிரான வெளிப்படையான இனவேறுபாட்டை கொண்டுள்ளது என திருஹேவகே சமர்ப்பித்துள்ளதை நாங்கள் நிராகரிக்கின்றோம் என கனடாவின் மேல்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் முன்னுரையில் இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலை கொள்கைகள் எனக் குற்றம் சாட்டப்படும் கொள்கைகள் சிங்கள பௌத்த மையப்படுத்தப்பட்டவை என்றே குறிப்பிடப்படுவதாகவும், சிங்கள பௌத்தர்கள் ஒரு இனக்குழுவாக அதற்குப் பொறுப்பாளிகள் எனத் தெரிவிக்கவில்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ம-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 180 | 200-250 | 300 |
| தக்காளி | 180 | 200 | 240 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 200 | 200-250 | 200 |
| கோவா | 250 | 320 | 250 | 250 | 300 |
| கரட் | 280 | 320 | 400 | 250 | 350 |
| பூசணி | 80 | 60 | 100 | 60 | 80 |
| புடோல் | 60 | 120 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 250 | 260 | 200 | 200-250 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 250 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 280 | 300 | 220 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 80 | 80 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 150 | 240 |
| பயற்றங்காய் | 200 | 150 | 120 | 120-150 | 200 |
| லீக்ஸ் | 320 | 300 | 280 | 300 | 320 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 200 | 120 |
| கறிமிளகாய் | 350 | 550 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 280 | 200 | 130-180 | 200 |
| போஞ்சி | 300 | 350 | 500 | 300 | 500 |
| கத்தரி தம்புள்ள | 250 | 300 | 250 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 200 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 200-250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 150 | 120 | 80-120 | 100-130 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 650 | 800 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 150 | 120 | 120 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 90 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 50 | 100 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3215

லதி





துஷி





தர்மினி




வந்தனா




நதியா





யதுளன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு இந்திய துணைத்தூதுவர் விஜயம்



(முல்லைத்தீவு)

யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்தார். இதன் போது அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரனை சந்தித்து மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள், பிரச்சினைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு அபிவிருத்தித் தேவைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரினால் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதுவரிற்கு விபரிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், யாழ். இந்திய துணை தூதரகத்தின் இணைப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (நி)

# தபால்மூல வாக்களிப்பு தொடர்பில் பாரதூரமான சம்பவங்கள் பதிவாகவில்லை

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள்




(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்குகள் குறியிடப்பட்டமை தொடர்பில் இதுவரையில் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.


இம்முறை அதிகமானோர் தபால் மூல வாக்குகளைப் பயன்படுத்தியமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பின் மூன்றாம் நாள் நேற்றுடன் நிறைவடைந்துள்ள போதிலும் வாக்களிக்க முடியாத அரச ஊழியர்களுக்கு கடந்த 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையொன்றை போலியாக தயாரித்து எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக காட்சிகளை படம்பிடித்த நபர் ஒருவர் கண்டி கட்டுகஸ் தோட்டை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நட்வடிக்கையானது தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு கிடைத்த முறைப்பாட்டின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி)

# யாழில் 'நமக்காக நாம்' பிரசார நடவடிக்கைகள்



(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி முதல் பொத்துவில் வரை முன்னெடுக்கப பட்டு வரும் 'நமக்காக நாம்' பிரசார பயணத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய பகுதி யில்தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பினர் பரப்புரை நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இந்த பரப்புரை நடவடிக்கையில் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளை பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (நி-33)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் செல்வி. வேலுப்பிள்ளை ஜீவலோஜினி அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர். திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 02.02.1944 — மறைவு 03.09.2024

(311)

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை நலன்புரிச்சங்கம், யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.


# இராசிபலன்

07.09. 2024
ஆவணி 22, சனிக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 3.24 மணிவரை

சித்திரை முற்பகல் 11.34 மணிவரை
சுபநேரம் -3.04-4.34 மணிவரை
இராகுகாலம்9.04-10.34 மணிவரை

விநாயகர் சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் -
சதயம்,பூரட்டாதி.

**வளவன்**

**மேஷம்** — சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** — உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உடல்நலனில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** — பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடிவரும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** — உறவினர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** — ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள்.

**கன்னி** — வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**துலாம்** — புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** — காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு** — நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**மகரம்** — சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமாக அமையும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** — பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், நேற்றைய பணியொன்று இன்னும் தொடரலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மீனம்** — காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, வரவும் செலவும் சமமாகும் நாள், வேலைச்சுமை கூடும்.

**உழைக்கும் மனிதனை இறைவன் வாழ்த்துகிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்-2024

## மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கும்ப இராசியினரே!




கடின உழைப்பினால் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கும்ப இராசி அன்பர்களே! நீங்கள் பார்ப்பதற்கு எளிமையாய் இருப்பவர்கள்.

இந்த மாதம் இராசிநாதன் சனியைத் தவிர மற்றக் கிரகங்கள் அனைத்தும் உங்களுக்கு நடுத்தரப் பலன்களைத் தர காத்திருக்கின்றன. இராசிநாதன் சனி மிக அனுகூலமாக இருக்கிறார். எதிலும் ஆதாயம் கிடைக்கும்.

பேச்சுத்திறமை அதிகரிக்கச் செய்யும். எதிர்பாலினத்தவரிடம் பழகும் போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும். நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வாழ்க்கைத் துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடலில் சூடு ஏற்படுத்தும் ஆகாரங்களைத் தவிர்ப்பது நன்மை தரும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. வியாபாரம் தொடர்பாக செய்து முடிக்க நினைக்கும் காரியங்கள் தள்ளிப்போகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல், வேலைப் பளு இருக்கும். பணி நிமித்தமாக நேரத்திற்கு அதிகமாக உழைக்க வேண்டியதிருக்கும். குடும்பத்தில் அமைதி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் மனம் மகிழும் காரியங்கள் நடக்கும். உறவினர்கள் வருகை இருக்கும். வீடு, மனை, வாகனம் விடயங்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும்.

பெண்கள் பேச்சுத் திறமையால் காரியங்களை சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும்.

கலைத் துறையினருக்கு என்றோ செய்த ஒரு வேலைக்கு இப்போது பாராட்டுக் கிடைக்கலாம். மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் குடும்பம் முன்னேற்றமடைய உதவும். அடுத்தவர் ஆச்சரியப்படும் வகையில் சாமர்த்தியமாகக் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். அரசியல் துறையினருக்கு தடைப்பட்டு வந்த காரியங்களில் தடை நீங்கும்.

இராசியாதிபதி சனியின் சஞ்சாரத்தின் மூலம் சாமர்த்தியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். உங்கள் செயல்களுக்கு தடைகளை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகிச் செல்வார்கள்.

மாணவர்கள் தேவையற்ற எண்ணங்களை விட்டுவிட்டு மனதை ஒருமுகப்படுத்தி பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.



**பரிகாரம்:** சனிக்கிழமை தோறும் சனிஹோரையில் அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்கு சென்று வாருங்கள்;

**அதிஷ்ட கிழமைகள்:** வளர்பிறை: செவ்வாய், வியாழன் தேய்பிறை: செவ்வாய், புதன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 5, 6

**அதிஷ்ட தினங்கள்:** 25, 26

## பிறர்நலனுக்காக உழைக்கும் எண்ணம் கொண்ட மீனஇராசியினரே!




தன்னை விட பிறர் நலனுக்காக உழைக்கும் எண்ணம் கொண்ட மீன இராசி அன்பர்களே! நீங்கள் யார் சொல்லையும் நிந்தனை செய்யாதவர்கள்.

இந்த மாதம் நல்ல பலன்களை அனுபவிக்கப் போகிறீர்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். நண்பர்களால் காரிய அனுகூலம் உண்டாகும்.

சுக்கிரனின் சஞ்சாரத்தால் எல்லாவித வசதிகளும் உண்டாகும். தேடிப் போனதும் தானாகவே வந்து சேரும். அறிவுத் திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதைக் கழிப்பீர்கள். மனோதைரியம் கூடும். மதிப்பு கூடும்.

தொழில் வியாபாரம் சிறப்பான முன்னேற்றம் பெறும். வாடிக்கையாளர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பாகப் பணி புரிந்து பாராட்டுப் பெறுவார்கள். சிலருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கலாம். பணியில் பாராட்டுக் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும் சந்தோசமும் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும்.

பிள்ளைகளின் கல்வியில் கூடுதல் கவனம் தேவை. தங்க நகை சேரும் காலகட்டம் இது. பெண்கள் நீண்ட நாட்களாக செய்ய நினைத்த ஒரு காரியத்தை செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும்.

கலைத் துறையினருக்கு போட்டிகள் நீங்கும். உங்களுக்குப் பக்கபலமாக ஒருவரது உதவி கிடைக்கும். முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். சாதுரியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். பணவரத்துக் கூடும். காரியத் தடைகள் நீங்கும். செல்வம் சேரும். செல்வாக்கு உயரும்.

அரசியல் துறையினருக்கு வாழ்க்கைத் தரம் உயர எடுக்கும் முயற்சிகள் கைகூடும். நெருக்கமானவர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள்.

முன்பின் யோசிக்காமல் எதையாவது பேசி விடுவீர்கள். அதனால் வீண் மனஸ் தாபங்கள் ஏற்படலாம் கவனம் தேவை.



வழக்கத்தை விட செலவு கூடும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும்.

**பரிகாரம்:** அருகிலிருக்கும் ஏதேனும் கோவிலுக்குச் சென்று நல்லெண்ணெய் தீபம் ஏற்றவும்

**அதிஷ்ட கிழமைகள்:** **வளர்பிறை:** திங்கள், வியாழன், வெள்ளி

**தேய்பிறை:** திங்கள், வெள்ளி;

**சந்திராஷ்டம தினங்கள்:** 7, 8

**அதிஷ்ட தினங்கள்:** 1, 27, 28

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

வட்டியில்லா கல்விக்கடன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு கடன் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை 7000 மாணவர்களிடம் இருந்து எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவல்களை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு, அதிகபட்சமாக, பதினைந்து இலட்சம் ரூபாய் வரை ஐந்து பிரிவுகளின் கீழ் கடன் பெறலாம்.

அத்துடன் மாணவர்கள் பதினெட்டு உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கடன் தொகையைப் பெறுவதற்கு இரண்டு உத்தரவாததாரர்கள் கட்டாயம் என்றும் தாய் அல்லது தந்தை முதல் உத்தரவாததாரராக கையொப்பமிட வேண்டும் மற்றும் கடன் தொகையை அங்கீகரிக்கும் வங்கியின் தேவைக்கேற்ப இரண்டாவது உத்தரவாததாரரை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடன் பெற்ற 292 மாணவர்கள் கடன் தொகையை செலுத்த தவறியமையால் இம்முறை உத்தரவாததாரர்களின் தேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் எட்டாவது தடவையாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் இம்முறை 2022ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# திருக்குறள் நூல் வெளியீடு இன்று




(யாழ்ப்பாணம்)

முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் அகவை எண்பதில், திருக்குறள் நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி. சுஜீவா சிவதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை, அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. தர்மினி ரஜீபன் வழங்க, ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வரும் வாழ்த்துரையை சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் ஆற்றவுள்ளனர்.

வெளியீட்டுரையை வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து நூல் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வை.விஜயபாஸ்கரன் நிகழ்த்துவார். நூலின் முதற்பிரதியை சிவ கணேசன் புடைவையகத்தின் உரிமையாளர் கனகசபை அருள்நேசன் பெற்றுக் கொள்வார். ஏற்புரையை உரையாசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றவுள்ளார்.

முன்னதாக தமிழ்த் தாய் வாழ்த்தை செல்வி அ.ஆதித்யா, செல்வி அ.சகானா, செல்வன் அ.அபராஜிதன் ஆகியோர் பாடவுள்ளனர். (நி)

## தமிழரசுக் கட்சியின் முடிவால்

# தமிழ் பொது வேட்பாளருக்கு பாதிப்பில்லை-சித்தார்த்தன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக் கட்சி அறிவித்த முடிவினால் தமிழ் பொது வேட்பாளரின் வாக்கில் தாக்கம் இருக்காது என பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை தமிழ் பொது வேட்பாளருக்கான பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சியினர் முழுமையாக சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்கவில்லை. அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தற்போதும் தமிழ் பொது வேட்பாளருக்கே தனது ஆதரவை தெரிவித்து வருகின்றார்

பல கட்சிகள் ஒன்றாக ஒன்றிணைத்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கிறோம்.

தமிழரசு கட்சியினர் சஜித்துக்கு ஆதரவு என தெரிவித்துள்ளமை தமிழ் பொது வேட்பாளரின் வாக்கில் தாக்கம் செலுத்தாது என தெரிவித்தார். (நி-33)

தேவை
உழவு மிசின் வேண்டும்.
135D, DL- Massey Ferguson
(313)
தொடர்புகளுக்கு
077 918 9464

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அனுசம்
10 இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, வியாபாரம் (own)
எதிர்பார்ப்பு: தகுதியான மணமகள்
தொ.இ: B/14765

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ரேவதி
7 இல் செவ்
கி.பா: 29 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/14768

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Graphic Designing, மக்ரோ சிஸ்ரம்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14769

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 11
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, தையல்
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/14708


பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
11 இல் செவ்
கி.பா: 56
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, தையல்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/14709

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: சுவாதி
11 இல் செவ்
கி.பா: 17
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc, Teaching
எதிர்பார்ப்பு: படித்த வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/14712

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

சேவைநலன் பாராட்டு

திரு. சந்திரசேகரம் கோபிநாத்
(SLTAS-I, BEd)
ஆசிரிய ஆலோசகர் (கணிதம்)



சேவைக்காலம்

- யா/செம்பியன்பற்று அ.த.க பாடசாலை உதவி ஆசிரியர் -(1989.04.26-1989.05.14)
- யா/மாமுனை அ.த.க பாடசாலை உதவி ஆசிரியர் -(1989.05.15-1993.02.01)
- யா/பலாலி ஆசிரியர் கலாசாலை ஆசிரிய பயிற்சியாளர் -(1993.02.02-1994.12.31)
- யா/மாமுனை அ.த.க பாடசாலை ஆசிரியர் - (1995.01.01-1996.12.31)
- யா/குடத்தனை அ.த.க பாடசாலை ஆசிரியர் - (1997.01.01-1999.02.05)
- யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம் ஆசிரியர் -(1999.02.06-2000.01.02)
- யா/மாதனை மெ.மி.த.க பாடசாலை ஆசிரியர் - (2000.01.03-2002.02.14)
- யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆசிரியர் - (2002.02.15-2009.12.31)
- யா/ஞானாசாரியார் கல்லூரி ஆசிரியர் - (2010.01.01-2010.12.31)
- வலயக் கல்வி அலுவலகம் - வடமராட்சி ஆசிரிய ஆலோசகர் - (2011.01.01-2024.09.06)

வலயக்கல்வி அலுவலகம் வடமராட்சியில் ஆசிரிய ஆலோசகராகப் (கணிதம்) பணியாற்றி 07.09.2024 இன்று ஓய்வு பெறும் திரு. சந்திரசேகரம் கோபிநாத் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வு காலத்தில் உடலாரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்

(1875)

வாழ்த்துவோர்:
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கமலா ஹாரிஸிற்கு ஆதரவு

## ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவிப்பு



(வோஷிங்டன்)

ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதியான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்துக்கணிப்புகளில் ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் முன்னிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே சமீபத்திய கருத்துக்கணிப்பில் இருவரும் இடையே சிறிய அளவில்தான் வித்தியாசம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரசியல் நிபுணர்கள் கூறும்போது, கருத்துக்கணிப்புகளில் கமலா ஹாரிஸ் சில விகிதங்களில் முன்னேறி வந்தாலும் தொடக்கம் முதலே ட்ரம்ப் சராசரியாக 47 சதவீத ஆதரவுடன் உறுதியான இடத்தில் இருந்து வருகிறார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கமலா ஹாரிஸை ஆதரிப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

விலடிவோஸ்டாக்கில் உள்ள கிழக்கு பொருளாதார மன்றத்தில் பேசிய புடின், "அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன் தான் எங்களது விருப்பமான வேட்பாளராக இருந்தார். ஆனால் ஜோ பைடன் போட்டியில் இருந்து விலகி கமலா ஹாரிஸை ஆதரித்தார். ஆகவே நாங்களும் கமலா ஹாரிஸை ஆதரிக்கிறோம்.

கமலா ஹாரிஸின் சிரிப்பு தனித்துவமாக உள்ளது. அந்த சிரிப்பே அனைத்தும் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற உணர்வைத் தருகிறது.

முன்பு ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப், ரஷ்யாவிற்கு எதிராக பல கட்டுப்பாடுகளையும் தடைகளையும் விதித்தார். கமலா ஹாரிஸ் அத்தகைய செயல்களை செய்ய மாட்டார் என்று நினைக்கிறேன்.

ஆனால் இறுதியில் யார் வெற்றி பெறப்போகிறார்கள் என்பதை அமெரிக்க மக்கள் தான் முடிவு செய்வார்கள்" என்று தெரிவித்தார். (நி)

# கொங்கோவை சென்றடைந்த குரங்கு அம்மை தடுப்பூசி

(கொங்கோ)

குரங்கு அம்மை தடுப்பூசியின் முதல் தொகுதி கொங்கோவை சென்றடைந்துள்ளது.

டென்மார்க் நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட இந்த கையிருப்பில் 100,000 தடுப்பூசிகள் உள்ளடங்குவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உலக சுகாதார நிறுவனம் 12 ஆபிரிக்க நாடுகளில் பரவிய குரங்கு அம்மையால் உலகளாவிய அவசரநிலையாக அறிவித்த மூன்று வாரங்களுக்குப் பிறகு தடுப்பூசிகளின் கையிருப்பு கொங்கோ தலைநகருக்கு கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சமூக ஊடகங்களை பயன்படுத்த அரச ஊழியர்களுக்கு தடை

## பாகிஸ்தான் அரசு அதிரடி உத்தரவு

(இஸ்லாமாபாத்)


அரச ஊழியர்கள் அனுமதியின்றி சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் வகையில் பாகிஸ்தான் அரசாங்கம் புதிய உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு எதிராகத் தகவல்கள் வெளியிடுவதைத் தடுக்கும் வகையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அரச ஊழியர்கள் அனுமதியின்றி எந்தச் சமூக வலைத்தளத்தையும் பயன்படுத்த முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பிரதமர் மோடி முயற்சி எடுத்தால் பேச்சுவார்த்தைக்கு தயார்

## ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்



(மொஸ்கோ)

உக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வர பிரதமர் மோடி முயற்சி எடுத்து, உக்ரைனும் அதற்கு ஒத்துழைத்தால் பேச்சுவார்த்தையில் பங்கேற்க ரஷ்யாவும் தயங்காது என அந்நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா- உக்ரைன் இடையேயான போர் இரண்டு ஆண்டுகளை தாண்டியும் தொடர்கிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா தலைமையில் மேலை நாடுகள் ஆயுதங்களும் நிதியும் அளித்து வருகின்றன. ரஷ்யாவுக்கு எதிராக அவை பொருளாதார தடைகளையும் விதித்து உள்ளன.

ரஷ்யாவுடன் நல்லுறவு பாதிக்காத வகையில், இந்தியா இந்தப் பிரச்சினையில் விலகி நின்றது. அமெரிக்காவின் ஆட்சேபத்தை பொருட்படுத்தாமல், ரஷ்யாவிடம் மலிவு விலையில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது.

இது அப்பட்டமான ரஷ்ய ஆதரவு நிலைப்பாடு என்று மேலைநாடுகள் விமர்சனம் செய்வதை மோடி அரசு கண்டு கொள்ளவில்லை.

இந்நிலையில் ஜுலை மாதத்தில் பிரதமர் மோடி ரஷ்யா சென்றார். ஜனாதிபதி புடினை சந்தித்து பேசினார். உக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வரும்படி வலியுறுத்தினார்.

எந்த பிரச்சினைக்கும் போர்க்களத்தில் தீர்வு காண முடியாது என்றும் சுட்டிக்காட்டினார். இது, புடினுக்கு எரிச்சலை ஏற்படுத்தினாலும், மேலைநாடுகளை முழுவதுமாக பகைத்துக் கொண்ட நிலையில், இந்தியாவின் நட்பை இழக்க அவர் தயாராக இல்லை.

கச்சா எண்ணெயால் கிடைத்து வரும் வருமானத்தையும் இழக்க விரும்பவில்லை.

இதையடுத்து கடந்த மாதம் உக்ரைன் சென்ற பிரதமர் மோடி, ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை சந்தித்தார். பேச்சுவார்த்தை வழியாக போரை முடிவுக்கு கொண்டு வர, ரஷ்யாவுடன் பேச்சு நடத்தும்படி வலியுறுத்தினார்.

அதற்கு தேவையான உதவிகளை செய்ய, இந்தியா தயாராக இருப்பதாகவும் உறுதி அளித்தார்.

ஜெலன்ஸ்கி முகத்தை இறுக்கமாகவே வைத்திருந்தார். இந்தியா மட்டும் நடுநிலையை கைவிட்டு, ரஷ்யாவுடன் தன் உறவை திருத்திக் கொண்டால் போர் உடனே முடிந்து விடும் என மோடி முன்னிலையிலேயே இந்திய செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (நி)

# பாடசா

## 17 மா

# கென்ய

(நைரோபி) —

கிழக்கு ஆபிரி

ஹில்சைட் எண்

விடுதியில் ஏற்

மாணவர்கள் உ


பல மாணவர்கள் கல்வி கற்று வரும் குறித்த பாடசாலையில் மாணவர்கள் தங்கியிருக்க பிரத்தியேகமாக காணப்படுகின்ற விடுதியிலேயே

# தென் சீனாவை

# நகரும் 'யாகி

❖ பாடசாலைக

❖ விமான சேவ



(பீஜிங்)

தென் சீனாவை நோக்கி சக்தி வாய்ந்த யாகி சூறா வளி நகர்வதால் நேற்று வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்துள்ளது. இதனால் பாடசாலைகள் இரண்டாவது நாளாக மூடப்பட்டுள்ளதோடு விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு ஆசியா வைத் தாக்கும் வலிமையான சூறாவளிகளில் ஒன்றான யாகி ஹைனானின் வெப்பமண்டல கடற்கரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சாலை விடுதியில் தீ விபத்து!

# மாணவர்கள் உடல் கருகி பலி!

## யாவில் துயரம்

)

ஆபிரிக்கா - கென்யாவின் நெய்ரி நகரில் ண்டர்சா என்ற பாடசாலையின் மாணவர் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்குண்டு 17 ர் உயிரிழந்துள்ளனர்.



வி சா ங்கி ணப் யே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.


இந்தக் கோர விபத்தில் 17 மாணவர்கள் தீயில் உடல் கருகி உயிரிழந்துள்ளதோடு மேலும், 13 மாணவர்கள் பலத்த தீக்காயத்திற்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தகவலறிந்து விரைந்த பொலிஸார் மற்றும் தீயணைப்புத்துறையினர் பாடசாலை விடுதியில் தீயை அணைத்து காயமடைந்த மாணவர்களை மீட்டிருந்தனர்.

இந்நிலையில், தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

# னாவை நோக்கி ாகி' சூறாவளி

## லகளுக்கு பூட்டு சேவைகள் ரத்து



நிலச்சரிவை எற்படுத்த தும் என தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில் பெரில் சூறாவளிக்கு பின்னர் உலகின் இரண்டாவது சக்தி வாய்ந்த வெப்ப மண்டல சூறாவளியாக யாகி பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு பிலிப்பைன்ஸை தாக்கிய பலம் வாய்ந்த யாகி சூறாவளி வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் ஹைனான் தீவில் உள்ள வென்சாங் கிலிருந்து குவாங்டாங் மாகாணத்தில் உள்ள லீஜோ வரை சீனாவின் கடற்கரையோரம் நிலச்சரிவை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பின்னர் வியட்நாம் மற்றும் லாவோஸை தாக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஹனோயின் நொய் பாய் இன்டர்நேஷனல் உட்பட வடக்கில் உள்ள நான்கு விமான நிலையங்கள் சனிக்கிழமை மூடப்படும் வியட்நாமின் சிவில் விமான போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஹைனான், குவாங்டாங், ஹொங்கொங் மற்றும் மக்காவ் ஆகிய பகுதிகளில் பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டதால், வெள்ளிக்கிழமை தெற்கு சீனா முழுவதும் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

உலகின் மிக நீளமான கடற்பரப்பை கடந்து செல்ல ஹொங்கொங்கை மக்காவுடன் இணைக்கும் பிரதான பாலம் மற்றும் குவாங்டாங்கில் உள்ள ஜுஹாய் ஆகியவை மூடப்பட்டன. (நி)

# பிரான்ஸின் புதிய பிரதமராக மிஷெல் நியமனம்

(பாரிஸ்)

பிரான்ஸின் புதிய பிரதமராக ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னாள் பிரெக்ஸிட் பேச்சுவார்த்தைக் குழுத்தலைவர் மிஷெல் பார்னியரை அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் நேற்று முன்தினம் நியமித்தார்.



பிரக்ஸிட் பேச்சுவார்த்தையாளரான மைக்கேல் பார்னியரை பிரான்ஸ் புதிய பிரதமராக அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் நியமித்துள்ளதாக எலிஸி அரண்மனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மைக்கேல் பார்னியர், 2016 - 2021 ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவது தொடர்பிலான பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை தாங்கியவர் என்பது விசேட அம்சமாகும்.

மேலும், இவர் லெஸ் குடியரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் நடைபெற்ற தேர்தலில் இடதுசாரி மக்கள் முன்னணி அதிக இடங்களை வென்றபோதும் முழுமையான பெரும்பான்மை யாருக்கும் கிடைக்காதமையினால் பிரான்ஸில் தொங்கு பாராளுமன்றம் ஏற்பட்டது.

இந்த நிலையிலேயே பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோனால் பிரான்ஸ் புதிய பிரதமராக மைக்கேல் பார்னியர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் மூலம் பிரான்ஸ் வரலாற்றில் 5 ஆவது குடியரசின் மிகவும் வயதான பிரதமர் எனும் பெயரை மைக்கேல் பார்னியர் பெறுவார்.

பொதுத் தேர்தலில் 47 இடங்களுடன் 4 ஆவது இடத்தில் உள்ள வலதுசாரி கட்சித் தலைவரான பார்னியர் தற்போது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளமையால் ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் புதிய அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடுதியாக குறைவடைந்த பழங்களின் விலைகள்

(கொழும்பு)

சந்தையில் பழங்களின் மொத்த விலை சடுதியாகக் குறைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கமைய கடந்த காலங்களில் 450 ரூபாயிற்கு விற்கப்பட்ட ஒரு கிலோ அன்னாசியின் விலை தற்போது 200 ரூபாயாக குறைந்துள்ளது.

அத்துடன் கொய்யாப்பழம் ஒரு கிலோகிராம் 90 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் வாழைப்பழம், பப்பாசி, தர்ப்பூசணி மற்றும் விளாம்பழம் ஆகியவற்றின் விலைகளும் சடுதியாக குறைந்துள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# சமூக ஊடகங்களில் பொய்ப்பிரசாரங்கள் அதிகரிப்பு

## எச்சரிக்கும் கஃபே

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது சமூக ஊடகங்களின் ஊடாக பொய்ப்பிரசாரங்கள் மற்றும் வெறுப்பூட்டக் கூடிய பிரசாரங்கள் அதிகரித்துள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் அமைப்பான கஃபே அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் 2019 ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகிறது என கஃபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான மனாஸ் மக்கீன் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதிகளில் சமூக ஊடகங்கள் தொடர்பில் கஃபே அமைப்பின் கண்காணிப்பாளர்கள் மேற்கொண்ட கண்காணிப்புகளின்படி 5 வேட்பாளர்களை இலக்கு வைத்து வெறுப்பூட்டக்கூடிய பிரசாரங்கள், பொய்யான செய்திகள் மற்றும் தவறான தகவல்கள் பகிரப்படுகின்றமை தெரிய வந்துள்ளது.

இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்குத் தடையாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சமூக ஊடகங்களின் மூலம் பொய்யான மற்றும் வெறுப்பூட்டக் கூடிய பிரசாரங்களால் வன்முறை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் உருவாகலாம் என கஃபே அமைப்பு எச்சரித்துள்ளது. (நி)

# ஊவா மாகாண ஆளுநராக அநுர விதானகமகே நியமனம்



(கொழும்பு)

ஏ.ஜே.எம் முஸம்மில் பதவி விலகியதை அடுத்து ஏற்பட்ட ஊவா மாகாண ஆளுநர் வெற்றிடத்திற்காக அநுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண ஆளுநர் பதவியிலிருந்து ஏ.ஜே.எம். முஸம்மில் நேற்று முன்தினம் விலகியிருந்தார்.

தமது பதவி விலகலின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க விருப்பதாகவும் அவர் அறிவித்திருந்தார். இந்நிலையிலேயே ஏற்பட்ட ஆளுநர் பதவி வெற்றிடத்திற்கு அநுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

# மியன்மாரிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர்கள்

(கொழும்பு)

மியன்மாரில், ஆயுதம் தாங்கிய குழுவொன்றின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

குறித்த 20 இலங்கையர்களும் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச ஏதிலிகளுக்கான அமைப்பின் அனுசரணையில் தாய்லாந்தின் பெங்கொக்கில் இருந்து அவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (நி)

# இன்று ஒரு தகவல் 224



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சித்திகள்

ஒரு சாமியார் இருந்தார். நிறைய தவம் எல்லாம் செய்திருக்கிறார். அதனாலேயே அவருக்கு பல சித்திகள் கிடைத்தது. சித்து வேலைகளை செய்ய ஆரம்பித்தார். இதனாலே என்ன ஆகிவிட்டது என்றால் கொஞ்ச நாளிலே அவருக்கு தற்பெருமை வந்துவிட்டது.

அவர் உண்மையாகவே மிகவும் நல்லவர் தான்! சாது தான்! நல்ல குணம் எல்லாம் அவரிடம் நிறைய இருந்தது. இருந்தாலும் தற்பெருமை அவரை விட்டுப்போகவில்லை.இது அந்த ஆண்டவனுக்கே பொறுக்கவில்லை. யோசித்து பார்த்தார் இவருடைய தற்பெருமையைப் போக்குவதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்.

உடனே ஒரு சந்நியாசி கோலத்திலே அந்த சாது இருந்த இடத்திற்கு வந்தார். "சுவாமி! நீங்கள் நிறைய சித்திகள் அடைந்து இருக்கிறதாக கேள்விப்பட்டேன்.அதுதான் உங்களை பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றார்.

சாது உடனே தன்னைப் பார்ப்பதற்காக வந்திருக்கின்ற அந்த சந்நியாசியை மிகவும் மரியாதையாகக் கூப்பிட்டு உட்கார வைத்தார்.

அந்தச் சமயம் பார்த்து அந்த வழியாக ஒரு யானை போய்க்கொண்டிருந்தது.

சந்நியாசி அதனைப்பார்த்தார். உடனே அந்த சாதுவிடம் கேட்டார். சுவாமி நீங்கள் நினைத்தால் இந்த யானையைக் கொல்ல முடியுமா? என்றார்.

ஓ! செய்து விடலாமே. அது என்ன பெரிய காரியம் என்றார். ஒரு பிடி மண்ணைக் கையிலே எடுத்தார். ஏதோ முணுமுணு என்று சொல்லி மந்திரித்தார்.

அப்புறம் அந்த மண்ணை யானை மேலே வீசினார்.அவ்வளவு தான். உடனே அந்த யானை கீழே சுருண்டு விழுந்து இறந்துபோய்விட்டது.

சந்நியாசி இதைப் பார்த்தார் ஆகா! எப்பேர்ப்பட்ட சக்தி உங்களுக்கு. அபாரம்! ஒரு பெரிய யானையை சுலபமாகக் கொன்று விட்டீர்களே. என்று சொல்லி சாதுவை மிகவும் பாராட்டினார்.

இந்தப் பாராட்டைக் கேட்டவுடனே அந்த சாதுவிற்கு தலை கால் புரியவில்லை. மிகவும் சந்தோசப்பட்டார். பெருமை தாங்கவில்லை.

இப்போது அந்த சந்நியாசி மறுபடியும் கேட்டார். நல்லதுங்க இப்போது இறந்து போன இந்த யானைக்கு மறுபடியும் உயிர் உண்டாக்க முடியுமா? என்றார்.

ஓ! செய்துவிடலாமே அதுவும் ஒன்றும் பெரிய காரியமில்லை என்றார் சாது.

இப்படி சொல்லி விட்டு மறுபடியும் ஒரு பிடி மண்ணைக் கையிலே எடுத்தார். மந்திரித்தார். அந்த யானை மேலே வீசினார். அவ்வளவு தான் இந்த யானை அசைய ஆரம்பித்தது. மறுபடியும் எழுந்து நின்றது.

இப்போது அந்த சந்நியாசி கேட்டார். சுவாமி உங்களிடம் இருக்கும் சக்தி உண்மையிலே மிகவும் பெரிது தான். அதிலே கொஞ்சம் கூட சந்தேகமில்லை. ஆனால் நான் உங்களிடம் ஒரு கேள்வியை மட்டும் கேட்பதற்கு ஆசைப்படுகின்றேன். கேள் என்றார் சாது.

இப்போது ஒரு யானையைக் கொன்றீர்கள். அதற்குப்பின் அதற்கு உயிரைக் கொடுத்து எழுந்திரிக்க வைத்தீர்கள். சரி

இருந்தாலும் இதனாலே உங்களுக்கு கிடைத்த நன்மை என்ன? அது மூலமாக உங்களுக்கு என்ன ஆன்மிக முன்னேற்றம் கிடைத்தது. ஆண்டவனிடம் போவதற்கு இது ஏதாவது உதவி செய்ததா? இது தான் என் கேள்வி என்றார் அந்த சந்நியாசி.சாது கண்ணைத்திறந்து பார்த்தார். எதிரிலே அந்த சந்நியாசி இல்லை. மறைந்து விட்டார்.

இவர் அதன்பின் தான் யோசிக்க ஆரம்பித்து விட்டார். அவரினுடைய தற்பெருமை அவரை விட்டு விலகிப்போய்விட்டது. சித்திகள் கடவுளைக்காட்டுவதில்லை. என்பதை சொல்வதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதை இது.

கல்லூரியிலே படிக்கின்ற காலத்திலே நாங்கள் சில சித்து வேலைகளை செய்ததுண்டு. ஆனால் அதற்குப் பேர் மஜிக்.

ஆண்டு விழா சமயத்திலே மஜிக் ஷோ நடத்துவதாக முடிவு செய்தோம். ஒரு சின்னப் பெட்டி அதற்கு இரண்டு பக்கமும் கதவு. நடுவிலே ஒரு தடுப்பு இருக்கும். ஒரு பக்கம் மண்ணை அள்ளிப் போட்டு அடுத்த பக்கம் திறந்து சர்க்கரையாக அள்ளிக் கொடுப்போம்.

ஏன் என்றால் ஏற்கனவே அதற்குள் சர்க்கரையை போட்டு வைத்திருப்போம்.

இதுலே அன்றைக்கு சாக்லேட் வாங்கி முன்னாடியே போட்டு வைத்து விட்டோம்.

காலையிலே ஒரு சின்னப் பையனை தயார் செய்து வைத்து விட்டோம். இதோ பாருப்பா மேடையிலே உனக்கு என்ன வேண்டும் என்று கேட்போம். நீ எனக்கு சாக்லேட் வேண்டும் என்று சொல்ல வேண்டும் என்று பயிற்சி எல்லாம் கொடுத்து வைத்திருந்தோம்.

சாயந்தரம் மேடையிலே மஜிக் ஷோ நடக்குது. மந்திரவாதி பையனைக் கூப்பிட்டார். பையன் வந்து நின்றான். உனக்கு மிட்டாய் வேண்டுமா லட்டு வேண்டுமா அல்வா வேண்டுமா என்று கேட்டார். பையன் முழிக்கிறான். உனக்கு என்ன வேணும் என்று கேட்போம் என்று தானே காலையிலே சொன்னார்கள். ஆனால் இப்போது இப்படி அது வேணுமா இது வேணுமா என்கின்றார்களே என்று குழம்பினான். சரி எது வேண்டுமென்றாலும் கேட்கலாம் போல இருக்கு என்று நினைத்து எனக்கு அல்வா வேண்டும் என்றான்.

இதுவரைக்கும் அவன் முழித்துக் கொண்டிருந்தான். இப்போது மந்திரவாதி முழிக்க ஆரம்பித்து விட்டார். மெதுவாக அவனுக்கு மட்டும் காதிலே விழுகின்ற மாதிரி சாக்லேட் வேணும் என்று கேளடா என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னார்.

இது எல்லோருடைய காதிலேயும் விழப்போக உடனே திரையை முடுவதாக ஆகிவிட்டது. திரையை முடியவுடன் மந்திரவாதி வேடத்திலே இருந்த அந்த மாணவன் அந்தப் பையனை துரத்தியிருக்கிறார் பாருங்க அப்பேர்ப்பட்ட துரத்தல். அவன் பெஞ்சுக்குள்ளே புகுந்து தப்பித்து ஓடிவிட்டான். ஸ்ரீராமகிருஷ்ணர் கதையிலே சித்திகள் கடவுளைக் காட்டுவதில்லை என்று தெரிந்து கொண்டோம். எங்கள் கதையிலே நாங்கள் செய்த சித்து வேலை எங்களையே எல்லோருக்கும் காட்டிக் கொடுத்து விட்டது. இது தான் வித்தியாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் மனநிலையை அறிந்து அவர்களை வழிப்படுத்த வேண்டும்

## கிளி. சிறுவர் நீதிமன்ற திறப்பு விழாவில் நீதிபதி கிறேசியன் அலெக்ஸ்ராஜா

(கண்டாவளை)

சிறுவர்களின் மனநிலையை அறிந்து அவர்களை எந்த வகையில் வழிப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்து செயற்பட வேண்டும் என கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி கிறேசியன் அலெக்ஸ் ராஜா தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில் கிளிநொச்சிக்கான சிறுவர் நீதிமன்றம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வறுமை, கல்வியின்மை, கல்வி கற்காமை, போதை பொருள் பாவனை என்பன யுத்தத்தின் விளைவுகளாகக் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து சிறுவர்களை மீட்க வேண்டியது அவசியமாகும்.

சிறுவர் நீதிமன்றங்கள் என்ற வகையிலே முதலாவது சிறுவர் நீதிமன்றம் பத்தர முல்லையிலும் இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் உள்ளது.



மூன்றாவது சிறுவர் நீதிமன்றமாக இன்று கிளிநொச்சியிலும் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. சிறுவர்களிடத்தே வேலை செய்வது கடினமானதாகும் ஆனாலும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் திறம்படவே செயற்பட்டு இருக்கின்றார்கள்.

குறிப்பாக வீதியோர வியாபாரங்களிலே ஈடுபடுகின்ற சிறுவர்களின் விடயத்தில் அவர்களுடைய வாழ்வாதாரம் கவனிக்கப்பட வேண்டி இருக்கின்றது. அவர்களுடைய கல்வி நிலை தொடர்பில் ஆராய வேண்டி இருக்கின்றது. பாடசாலை இடை விலகல்கள், ஒழுங்கற்ற வரவுகள், சிறுவர்களுடைய குற்றச்செயல்கள் தொடர்பாக கவனிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு பல்வேறுபட்ட விடயங்கள் இந்தச் சிறுவர் நீதிமன்றங்களினால் கையாள வேண்டிய தேவை இருக்கிறது. சிறுவர் நீதிமன்றத்தில் கையாளப்படுகின்ற சிறுவர்கள் தான் நாட்டினுடைய நாளைய எதிர்காலத்தின் தலைவராக வளருவார்கள். அவர்களை நாங்கள் சரியாக வழி நடத்த வேண்டியது எங்களது தலையாய கடமையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-315)

# இரவோடு இரவாக வெட்டப்படும் மரங்கள்

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சியில் பல இடங்களில் இனம்தெரியதவர்களால் இரவு வேளைகளில் பெறுமதிமிக்க மரங்கள் வெட்டியழிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் வீதியோரம், பொது இடங்கள், குளக்கரைகள், உரிமையாளர்கள் இல்லாத வளவுகளில் நிற்கின்ற பெறுமதி மிக்க மரங்களை இயந்திரம் மூலம் இரவோடிரவாக அறுத்து செல்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்த போதும் உரிய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இதனை விரைவில் தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-316)

# ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் பாதிப்பு

## நெருக்கடியைத் நீக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி கந்தபுரம் இல.01 பாடசாலையில் ஆசிரிய நெருக்கடி காணப்படுகின்றது. இவ்வாண்டு ஆரம்பத்தில் இருந்து தரம் 2 இற்கான வகுப்பிற்கு ஆசிரியர் இன்மையால் மாணவர்களின் கல்வி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி தெற்கு வலய கல்வி அதிகாரிகளிடம் பல தடவைகள் முறைப்பாடுகள் பெற்றோர்களினால் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை ஆசிரியர் நியமிக்கப்படாத நிலைமை காணப்படுகின்றது.

அக்கராயன் பிரதேசத்தில் முக்கிய ஆரம்பபாடசாலையான இப் பாடசாலையில் 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். கடந்த காலத்தில் இப்பாடசாலை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியடைந்த நிலையில் தற்போது தரம் 2 இற்கான ஆசிரியர் இல்லாததன் காரணமாக மாணவர்களின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (நி-350)

# தமிழ் மக்களுக்கான தீர்வு என்ன? அநுர பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்

## சட்டத்தரணி சிறீகாந்தா

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களிடம் ஆதரவு கோரும் தேசிய மக்கள் சக்தியினர், தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை வழங்க போகிறார்கள் என்பதனை முழு இலங்கை மக்களுக்கும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என தமிழ் தேசிய கட்சியின் தலைவர் மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்

மேலும் தெரிவிக்கையில்,

ஊழலற்ற , அதிகார துஷ்பிரயோகமற்ற சமூக கட்டமைப்பை உருவாக்க தனக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என அநுர குமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் அவர் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினை என்ன என்பதனை பார்க்காது ஒட்டுமொத்த நாட்டு மக்களின் பிரச்சினை பற்றி பேசுகின்றனர். முற்போக்கு சிந்தனை கொண்டவர்கள் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை தொடர்பில் முழுமையான பார்வை கொண்டவர்கள் அல்ல.

ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை. தமிழர்கள் என்ற காரணத்தால் விபரிக்க முடியாத பாரபட்சத்தை எதிர்கொண்டவர்கள் நாங்கள். பாரிய கொடிய சட்டங்களால் நசுக்கப்பட்டோம். 30 வருட காலமாக நரக வாழ்க்கை வாழ்ந்தோம் . நாங்கள் தமிழ் தேசிய இனம் என்ற அடிப்படையில் எமக்கு கிடைத்த உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாது தான் போராடினோம்.

ஆதரவு தாருங்கள் பின்னர் பேசி முடிப்போம் என எத்தனையோ பேர் கூறி ஏமாற்றிய பின்னரே யுத்தம் ஆரம்பமாகி அதனால் பெரும் இழப்புக்களை சந்தித்தோம்.

நாட்டின் உயர் நீதிமன்ற தீர்ப்பை மதிப்பதில்லை என கூறும் அநுர, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை உள்நாட்டில் விசாரிக்கலாம் எனக் கூறுகின்றார்.

உள்நாட்டில் விசாரிக்க தொடங்கினால் நீதித்துறை அழுத்தங்களை சந்திக்க வேண்டும் என நாங்கள் அறிந்தே உள்நாட்டு பொறி முறையில் நம்பிக்கை இல்லை சர்வதேச விசாரணையை கோரி வருகிறோம். தமிழ் மக்களின் பிரச்சினைகளை தமிழ் மக்கள் பக்கம் இருந்து அநுர தரப்பினர் சிந்திக்க வேண்டும். எங்களுடன் கை கொடுங்கள் என கோரும் போது ஆக குறைந்த தீர்வையாவது அவர்கள் கூற வேண்டும் என மேலும் தெரிவித்தார். (நி-33)

# வண்ணாத்தி ஆறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

## பொலிஸார் சுற்றிவளைப்பு



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட [illegible] வண்ணாத்தி ஆறு பகுதியில் காட்டுப்பகுதியில் இயற்கை வளங்களை அழித்து அப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் பல அடி ஆளத்திற்கு தோண்டப்பட்டு அப்பகுதியில் இருந்து மணல்களை சட்ட விரோதமான முறையில் இரவு வேலைகளில் வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதாக தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைவாக நேற்று சட்ட விரோதமான முறையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த 15 கியூப்பிற்கும் அதிகமான மணலினை பொலிஸார் கையகப் படுத்தினர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (நி-316)

# ஆவணிச்சதுர்த்தி பெருவிழா

நல்லூர் திருவாவளவு வரதராஜப்பிள்ளையார் தேவஸ்தான ஆவணிச் சதுர்த்தி பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

களிமண்ணாலான விநாயகப் பெருமானுக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று எம்பெருமான் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு அரச வீதி, சங்கிலியன் வீதி வழியாக பண்டாரக்குளம் ஊடாக வருகை தந்து கௌரி அம்மன் வீதியூடாக மீண்டும் ஆலயத்தை வந்தடைவார்.

தொடர்ந்து பண்டாரிக்குளத்தில் ஜலாதி வாசம் இடம் பெறும். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 574





"நேற்றிலிருந்து நான் உண்மையைச் சொல்வதென்று வைத்திருக்கிறேன். அதனால் தான் நிச்சயமாக சொல்ல முடியவில்லை!"

"ஓகோ! நேற்று முதல் நீ உண்மை பேசுகிறவனா? நல்ல வேடிக்கை" என்று மதுராந்தகர் சிரித்தார். "அதனால் நிச்சயமாய்ச் சொல்ல முடியாமற் போவானேன்?" என்று மறுபடியும் கேட்டார் மதுராந்தகர்.

"இந்தக் காலத்தில் எதைத் தான் நிச்சயமாகச் சொல்ல முடிகிறது? ஒருவரைப் போல் இன்னொருவர் இருக்கிறார். ஒரு நாள் மூடு பல்லக்கில் இருந்தவர், இன்னொரு நாள் ரதத்தில் இருக்கிறார்."

"என்ன சொன்னாய்?" என்று மதுராந்தகர் சிறிது திடுக்கிட்ட குரலில் வினவினார்." "ஒருவரைப்போல் இன்னொருவர் இருப்பதால் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை என்றேன்!"

"நான் யாரைப் போல இருக்கிறேன்?" "இரண்டு தடவை தங்களை நான் பார்த்திருக்கிறேன். அல்லது தங்களைப் போன்றவரைப் பார்த்திருக்கிறேன். தாங்கள்தானா அதாவது நான் பார்த்தவர்தானா, என்று சந்தேகமாயிருந்தது. அதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் சற்று முன்"

"குதிரைமேல் ஏறி நின்று அப்படி உற்றுப் பார்த்தாயா?" "ஆம், ஐயா!" "என்ன தெரிந்து கொண்டாய்?" "தாங்கள் நான் பார்த்தவராகவும் இருக்கலாம், இல்லாமலுமிருக்கலாம் என்று தெரிந்து கொண்டேன்."

மதுராந்தகருக்குக் கோபம் உண்டாகத் தொடங்கியதென்பது அவருடைய முகத்திலிருந்தும், குரலின் தொனியிலிருந்தும் தெரிந்தது. "நீ சுத்தப் போக்கிரி. உன்னை."

"இளவரசரே கோபிக்க வேண்டாம். நான் தாங்களையோ, தங்களைப் போன்றவரையோ பார்த்தது எங்கே என்று சொல்கிறேன். பிறகு தாங்களே தீர்மானித்துக் கொள்ளலாம்." "அப்படியானால் சொல், சீக்கிரம்!"

"ஒரு பெரிய கோட்டை, நாலாபுறமும் நெடிய மதில் சுவர். வீராதி வீரர்கள் பலர் அங்கே கூடியிருந்தார்கள். நடுராத்திரி, சுவரில் மாட்டிய பெரிய அகல் விளக்கிலிருந்து புகையினால் மங்கிய வெளிச்சத்தில் அவர்கள் ஆத்திரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சுவர் ஓரமாக ஒரு பல்லக்கு இருந்தது. அந்த வீரர்களின் தலைவரை மற்றவர்கள் ஏதோ கேள்விமேல் கேள்வியாகக் கேட்டார்கள். அவருக்குக் கோபம் வந்து விட்டது. வேகமாக எழுந்து போய் பல்லக்கின் அருகில் நின்றார். பல்லக்கை மூடியிருந்த பட்டுத்திரையை விலக்கினார்.


பல்லக்கின் உள்ளேயிருந்து ஒரு சுந்தர புருஷர் வெளியே வந்தார். அவரைப் பார்த்ததும் அங்கே கூடியிருந்த வீரர்கள் அனைவரும் 'வாழ்க! வாழ்க!' என்று கோஷித்தார்கள். 'பட்டத்து இளவரசர் வாழ்க!' என்றும் சிலர் கூவினார்கள். 'சக்கரவர்த்திக்கு ஜே!' என்று கோஷித்ததாகவும் ஞாபகம்! ஐயா, அப்போது பல்லக்கிலிருந்து வெளி வந்தவருடைய முகம் தங்கள் முகம் போலத்தான் இருந்தது. ஏதாவது நான் தவறாகச் சொல்லியிருந்தால் தயவு செய்து மன்னிக்கவேண்டும்."

நடுவில் குறுக்கிடாமல் இத்தனை நேரம் கேட்டுக் கொண்டிருந்த மதுராந்தகத் தேவருடைய நெற்றியில் வியர்வை துளிர்க்கலாயிற்று. அவருடைய முகத்தில் பயத்தின் சாயை படர்ந்தது.

"நேற்று முதல் உண்மையைச் சொல்லுகிறவனே! அந்த வீரர்களின் கூட்டத்தில் நீ இருந்தாயா?" என்று கேட்டார். "இல்லை, ஐயா! சத்தியமாக இல்லை!" "பின் எப்படிக் கூடயிருந்து பார்த்தது போலச் சொல்கிறாய்?"

"நான் கண்ட காட்சி உண்மையாக நடந்ததா அல்லது கனவிலே கண்டதா என்று எனக்கே நிச்சயமாகத் தெரியவில்லை. இன்னொரு காட்சியையும் கேளுங்கள். இருளடர்ந்த ஒரு நிலவறை, அதில் ஒரு சுரங்கப் பாதை. வளைந்து வளைந்து கீழே இறங்கி மேலே ஏறிப் போகவேண்டிய பாதை. அதன் வழியாக மூன்று பேர் வந்துகொண்டிருந்தார்கள். முன்னால் ஒருவன் தீவர்த்திப் பிடித்துக்கொண்டு போனான்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## முன்போலவே பழைய காகித விற்பனை

ஒருவன் தெருத் தெருவாகச் சென்று, பழைய பேப்பர்கள், உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களை வாங்கி, கடையில் விற்று, அந்த வருமானத்தில் சாப்பிட்டு வந்தான்.

சில மாதங்களில் அவனுக்குக் கொஞ்சம் பணம் சேர்ந்தது.

பழைய பேப்பர் வியாபாரத்தை விட்டு விட்டு கண்ணாடிப் பாத்திரங்களை வாங்கி, கூடையில் வைத்து வியாபாரம் செய்யலானான்.

ஒரு நாள் மிகவும் களைத்துப் போய், கூடையைத் தரையில் வைத்து விட்டு, இளைப் பாறினான். அப்படியே கண் அயர்ந்தான். அதோடு அப்படியே கற்பனையில், மனக் கோட்டை கட்டத் தொடங்கினான்.

"பழைய பேப்பர் வியாபாரத்தில் கொஞ்சமாகத்தான் லாபம் கிடைத்தது. இப்பொழுது கண்ணாடிப் பாத்திர வியாபாரத்தில், கூடுதலாக லாபம் வருகிறது. இன்னும் ஒரு வருடத்தில் ஒரு கடையைத் தொடங்கி, உட்கார்ந்த படியே, வியாபாரம் நடத்தலாம். கிடைக்கிற லாபத்தில், ஒரு சிறிய வீடு வாங்கலாம். அதன் பின், திருமணம் செய்து கொள்ள வேண்டியது தான். என்ன ஆனாலும். மாமாவின் மகளைத்தான் கட்டிக் கொள்ள வேண்டும்.

அவள் என்னிடம் பணிவோடு கனிவாக நடக்காமல் கர்வத்துடன் நடந்து கொண்டால், "போடி! உங்க அப்பன் வீட்டுக்கு என்று காலால் ஒரு உதை கொடுப்பேன்" என்று எண்ணிக் கொண்டு, ஒரு உதை விட்டான். எதிரே காலடியில் கூடையில் இருந்த கண்ணாடிப் பாத்திரங்கள் எல்லாம் உடைந்து சிதறின.

சத்தம் கேட்டு விழித்துப் பார்த்தான், அவ்வளவும் நொறுங்கிப் போய் விட்டன. அதைக் கண்டு வருந்தி அழுதான்.

பழையபடி பழைய பேப்பர் வாங்கி விற்கத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும். -- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் பொதுக்கட்டமைப்பின் நிலைப்பாடு எதுவாக உள்ளது

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதில் இன்னமும் குழப்பநிலை இருந்து வருகிறது.

அந்தளவுக்கு சிறந்த ஆட்சித் தலைவர் யார் என்பதை மக்களால் இனங்காண முடியாமல் உள்ளது.

இதனிடையே அரசியல் கட்சிகள் கன்னை பிரிந்து தத்தம் உடன்பாட்டுக்குக்கேற்ப ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இது ஒருபுறமிருக்க, தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் வெற்றி பெற முடியாதென்பது தெரிந்த விடயமாயினும் தமிழ் மக்கள் தங்கள் ஒற்றுமைப் பலத்தை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்துவதற்காக, தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளதாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இங்குதான் ஒரு முக்கிய விடயம் தமிழ்ப் பொதுக்கட்டமைப்பை நோக்கி முன்வைக்கப்படுகிறது.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தங்களின் சுயநிர்ணய உரிமை சார்ந்த விடயத்தில் உறுதியாக உள்ளனர் என்பதை வெளி உலகுக்கு வெளிப்படுத்துவதற்காக தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டிய தேவை உள்ளது எனக் கூறப்படுகிறது.

இருந்தும் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைக்கான ஜனாதிபதியாக சிங்களவர் ஒருவர் தெரிவு செய்யப்படப் போகிறார் என்பதும் தெரிந்த உண்மை.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற எந்த வேட்பாளரும் 51 சதவீத வாக்குகளைப் பெற முடியாது என்ற கணிப்பும் உண்டு.

அப்படியானால், இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் வந்தாலும் அதுபற்றி தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு பொருட்படுத்தப் போவதில்லையா? என்பதுதான் இங்கு முன்னெழுகின்ற கேள்வி.

ஆம், தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதில் கருசனை காட்டுகின்ற தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு; இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் வருவது பரவாயில்லை என்ற ஒரு தீர்மானத்தைத் தன்னளவிலேனும் எடுத்திருக்க வேண்டும். அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுக்காவிட்டால், அது மிகப்பெரும் தவறாகும்.

ஏனெனில், தமிழ் மக்களின் விடயத்தில் உலக நாடுகள் எந்தளவு தூரம் கருசனை கொண்டு செயலாற்றின என்பது நம் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

ஆக, இந்த நாட்டில் இனவாதமற்ற ஆட்சி அமைந்தால் மட்டுமே அடிப்படை உரிமை விடயங்களிலேனும் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

இதை நாம் கூறும்போது இனவாதமற்ற ஆட்சி அமைய முடியுமா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், அதற்கு இல்லை என்பதுதான் பதில்.

ஆனால், நாம் இங்கு இனவாதமற்ற ஆட்சி என்று கூறுவது வலுக்குறைந்த இனவாதத்தை எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

எனவே அடுத்த ஜனாதிபதியாக இருப்பதற்கு இவர் பொருத்தம் என்று தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு கருதுமிடத்து, விருப்பு வாக்குப் பற்றித் தனது கருத்தைப் பதிவு செய்வது காலத்தின் தேவையாக அமையும்.

# அரியநேத்திரன் போட்டியிடுவதனால் தமிழ்ச் சமூகத்திற்கு நன்மை கிடையாது

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் தமிழ் சமூகத்திற்கு எந்த நன்மையும் கிடைக்காது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு தமிழரசுக் கட்சி எடுத்த முடிவை தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கில் அரசியல் இயக்கம் கணிசமான அளவில் மாறியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஊடகம் ஒன்றில் இடம்பெற்ற நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு நாங்கள் முடிவு செய்தமையால், வடக்கி - கிழக்கின் பெரும்பான்மையான வாக்குகள் சஜித்துக்குத்தான் கிடைக்கும்.

தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரே முக்கிய வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர். "நாங்கள் சஜித்தை ஆதரிக்க முடிவு செய்துள்ளோம்," என்று எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எனினும், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் யோசனையை சுமந்திரன் நிராகரித்தார், அத்தகைய வேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றிபெற வாய்ப்பில்லை என்பதால் இது தவறான உத்தி என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பா.அரியநேத்திரன் தேர்தலில் போட்டியிடுவதால் தமிழ் சமூகத்திற்கு எந்த நன்மையும் கிடைக்காது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். 2019 தேர்தலில் நாங்கள் சஜித்தை ஆதரித்தோம், 2024ஆம் ஆண்டிலும் அவருக்கு ஆதரவளிப்போம் என சுமந்திரன் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# தெல்லியூரில் இன்று முத்தேவியார் உற்சவம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவந்தனில் இன்று முத்தேவியர் உற்சவம் இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 5.00 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்றதனைத் தொடர்ந்து முத்தேவியரும் திருவீதியுலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளனர். (ம-7)

# புகையிரத விபத்து ஒருவர் படுகாயம்

## கிளி. கணேசபுரத்தில் சம்பவம்

(கிளிநொச்சி)

புகையிரத விபத்தில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ்ராணி புகையிரதத்தில் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கணேசபுரம் பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முற்பட்டபோதே குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் கிளிநொச்சி உமையாள்புரத்தைச்சேர்ந்த 58 வயதான சுப்பையா சாந்தகுமார் என்பரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.குறித்த விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## புலோலிப் பகுதியில்

# டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த இருவருக்கு அபராதம்

(கரணவாய்)

டெங்கு பரவும்சூழலை வைத்திருந்த இரண்டு வீட்டின் உரிமையாளர்களுக்கு தலா 7500 வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை.

புலோலிப் பகுதியில் அண்மையில் சுகாதார பரிசோதகர்களால் வீடு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதில் டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த இரண்டு வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை சுகாதார பரிசோதகரால் நேற்று வெள்ளிக்கிழமை (06) வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதில் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 7500 வீதம் தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ம-7,60)

## சட்டவிரோதமான முறையில்

# கள்ளினை விற்பனை செய்த 7 பேருக்கு அபராதம்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் கள்ளினை விற்பனை செய்த ஏழு பேருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து தலா 5000 ரூபாய் வீதம் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை தீர்ப்பளித்தார்.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் ஏழு பேருக்கு எதிரான வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை(06) தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது ஏழு பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 5000 ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ம-7,60)

## பருத்தித்துறைக் கடற்பரப்பில் கைதான

# 11 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுதலை

(கரணவாய்)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் 11 பேரையும் நிபந்தனையுடன் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை விடுவித்தார் .

கடந்த ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட நாகபட்டினம் மாவட்ட மீனவர்கள் 11பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். நேற்று வெள்ளிக்கிழமை (06) பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை மீனவர்கள் 11 பேரையும் மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா மூன்று மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்து நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்க உத்தரவிட்டதுடன் படகோட்டிக்கு ஆறு மாத கால சாதாரண சிறைத் தண்டனை விதித்து அதை பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்து விடுவித்தார். (ம-7,60)

# அரசகேசரிப் பிள்ளையாருக்கு இன்று கொடியேற்றம்

(நீர்வேலி)

சரித்திரப் பிரசித்திபெற்ற நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப்பிள்ளையார் ஆலய குரோதி வருட மகோற்சவமானது விநாயகர் சதுர்த்தி நன்நாளான இன்று நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும் இவ்வாலய பிரம்மோற்சவந்தனில் 10 ஆம் திருவிழாவான எதிர்வரும் 16.09.2024 திங்கட்கிழமை 10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் பகல் 11 மணியளவில் தீர்த்தவாரியும் இரவு 8.00 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

06

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

மாநிலங்கள் ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்வதற்கான அதிகாரம் உடையவையா என்பது குறித்து அரசியலமைப்பில் குறிப்பிடவில்லை. உள்நாட்டுப் போரை அடுத்து சில ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க உச்ச நீதிமன்றம், டெக்சாசு எதிர் வைட் வழக்கில், ஒரு மாநிலம் தன்னிச்சையாக அவ்வாறு செய்ய இயலாது எனத் தீர்ப்பு வழங்கியது.

**அமெரிக்க மாநிலங்களுக்கு இடையேயான கூட்டாட்சி முறை பற்றி.....**

அமெரிக்க கூட்டாட்சி 50 மாநிலங்களைக் கொண்டதாக விளங்குகிறது. கூட்டாட்சியின் அடிப்படைப் பண்புகளான எழுதப்பட்ட நெகிழா அரசியல் யாப்பு, மத்திய மாநிலங்களுக்கிடையே அதிகாரப்பங்கீடு, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கிடையேயும் எழும் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு சுதந்திரமான பாரபட்சமின்றி செயற்படும் உயர்நீதிமன்றம் போன்றன வலுவாகவுள்ளன.

(குறிப்பு- இரண்டு வகையான அரசமைப்புகள் உள்ளன. அவை நெகிழும் மற்றும் நெகிழா அரசமைப்புகளாகும். நெகிழும் அரசமைப்பில் அரசமைப்பு சட்டத்திற்கும் சாதாரண சட்டத்திற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. இரண்டுமே ஒரே மாதிரியான முறைகளைப் பின்பற்றியே இயற்றப்படுகின்றன.

நெகிழா அரசமைப்பில் திருத்தம் செய்ய சில பிரத்தியேக முறைகள் தேவைப்படுகின்றன. நெகிழா அரசமைப்பிற்கு உதாரணங்களாக அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளை குறிப் பிடலாம். நெகிழா அரசமைப்பு சாதாரண சட்டங்களை விட உயர்வானது. சாதாரண சட்டங்களை மாற்றுவது போல் இல்லாமல் சில குறிப்பிட்ட தனி வழிகள் மூலம் தான் நெகிழா அரசியலமைப்பிற்கு திருத்தம் மேற்கொள்ளலாம். இதனால் திருத்தம் செய்வது கடினமாகும். அரசின் இறைமைக்கு உயர்வு அளிப்பதே நெகிழா அரசியலமைப்பின் நோக்கமாகும்.

பல நாட்டின் அரசியலமைப்புகள் அதிகப்படியான நெகிழும் தன்மையையோ அல்லது அதிக நெகிழாதன்மையையோ பெற்றில்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட தன்மையை கொண்டுள்ளதைக் காணலாம்.)

இவற்றினை விட மத்திய சட்டமன்றத்தின் ஒரு பிரிவான செனட் சபையில் சம பிரதிநிதித்துவம், இரட்டைக் குடியுரிமை போன்றன அமெரிக்க சமஷ்டிக்கேயுரிய தனிப் பண்புகளாகக் காணப்படுகின்றன.

அமெரிக்க சமஷ்டியின் சிறப்பான தன்மை அதன் அதிகாரப்பங்கியேயாகும். மாநில அரசுகளுக்கிடையேயுள்ள பொதுவான விடயங்களை மட்டும் மத்திய அரசின் அதிகாரங்களாக வரையறுத்து விட்டு ஏனைய அதிகாரங்கள் யாவும் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நாணயம் வெளியிடல், அயல் நாட்டு உறவுகள், முப்படைகள் மீது கட்டுப்பாடு செலுத்துதல். போர்ப் பிரகடனம் செய்தல், சமாதானம் செய்தல் போன்ற 18 விடயங்களே மத்திய அரசின் அதிகாரங்களாக உள்ளன. ஏனைய அதிகாரங்கள் மாநில அரசுகளின் பொறுப்புகளாக விடப்பட்டுள்ளன.

மத்திய சட்டமன்றமான காங்கிரசிற்கும் கூட்டாட்சியின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சில கட்டுப்பாடுகளை அரசியல் யாப்பு விதித்துள்ளது. உதாரணமாக மத்திய அரசாங்கம் மாநிலங்களிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்கள் மீது வரி விதித்தல் கூடாது, நேர்முக வரிகளை மாநிலங்களின் மக்கள் தொகைக்குத் தக்கபடி விதித்தல் வேண்டும். வர்த்தகத்தினைப் பொறுத்தவரை எல்லா மாநிலங்களையும் சமமாக நடத்துதல்? வேண்டும் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அதேவேளை மாநில அரசாங்கங்களின் மீதும் அரசியல் யாப்பு பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. சமயச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றைக் குறைப்பதற்கான சட்டங்களை உருவாக்கக் கூடாது. தனியான நாணயம் வெளியிடக் கூடாது. படைகளை வைத்திருத்தல் கூடாது. போன்றன இவற்றுள் சிலவாகும்.

அறிகாரப் பங்கீட்டில் அரசியல் யாப்பு ரீதியாக மாநிலங்களின் அதிகாரங்கள் அதிகமானதாக இருந்த போதும் பிற்காலங்களில் அதிகாரங்கள் மத்திய அரசினை நோக்கி குவியும் போக்கு வளர்ந்து வருகிறது.

அமெரிக்காவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களும் நிலப்பயன்பாட்டின் விரிவும் மக்கள் தொகைப் பெருக்கமும், உள்நாட்டுப் போரும், சர்வதேச வல்லரசு என்ற அந்தஸ்தும் மையத்தை நோக்கிய அதிகாரக் குவிப்பிற்கு காரணங்களாக இருந்திருக்கின்றன.

உயர்நீதிமன்றத்தின் பல தீர்ப்புகள், பொதிந்துள்ள அதிகாரமென்ற கோட்பாட்டின் வளர்ச்சி, காங்கிரஸினால் இயற்றப்பட்ட புது சட்டங்கள் என்பவற்றினூடாகவே இந்த அதிகாரக் குவிப்பு நடைபெற்றுள்ளது.

இதனடிப்படையில் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றும் அதிகாரம், மாநிலங்களுக் கிடையே போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், வங்கி முறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் போன்றன மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை வரிவிதித்தல், பொதுக் கடன் வாங்குதல், பொதுக் காரியங்களுக்காக தனியார் சொத்தினை சுவீகரித்தல் போன்றன மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் பொதுவான அதிகாரங்களாக உள்ளன.

நீதித்துறையைப் பொறுத்தவரை மத்திய அரசின் நீதித்துறை, மாநில அரசுகளின் நீதித்துறையென பிரிக்கப்பட்டிருக்கின்றமை அதிகாரப் பங்கீட்டிற்கு வலுச்சேர்ப்பனவாக உள்ளன.

**அமெரிக்காவின் வலுவேறாக்கம்**

அரசின் மூன்று துறைகளான சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பன ஒன்றோடு ஒன்று கட்டுப்பாடுகளோ, தலையீடுகளோ இன்றி சுதந்திரமாக இயங்கு தலையே வலுவேறாக்கம் அல்லது அதிகாரப்பிரிவினை என்றபதம் குறிக்கின்றது.

உலகிலுள்ள நாடுகளில் அதிகளவில் வலுவேறாக்க கோட்பாட்டினை அரசியல் யாப்பில் கொண்டுள்ள நாடு அமெரிக்காவே ஆகும். வலுவேறாக்க கோட்பாட்டின் அடிப்படையில் அரசின் மூன்று துறைகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டு தமது பணிகளைச் செய்து வருகின்றன.

சட்டவாக்க அதிகாரத்தினை இரண்டு சபைகளைக்? கொண்ட காங்கிரஸ்? மேற்கொள்கின்றது. நிர்வாக அதிகாரத்தை ஜனாதிபதி மேற்கொள்கின்றார்?. நீதி அதிகாரத்தினை உயர் நீதிமன்றத்தை தலைமையாகக் கொண்ட நீதித்துறை மேற்கொள்கின்றது. இங்கு ஒரு துறையில் அங்கம் வகிப்பவர் இன்னோர் துறையில் அங்கம் வகித்தல் கூடாது என்பது கடுமையாக பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

ஆனால் ஒரு துறை இன்னோர் துறையில் தலையீடோ, கட்டுப்பாடோ செலுத்துதல் கூடாது என்கின்ற விடயத்தில் தடைகளும் சமநிலைகளும் (Checks and balances) என்ற கோட்பாடு பின்பற்றப்படுகின்றது. மூன்று துறைகளும் சமநிலையாகத் தலையிட செய்யும் நிலை யாப்பில் காணப்படுகின்றது.

சட்டத்துறையான காங்கிரஸ் இயற்றும் சட்டங்களுக்கு கையொப்பமிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. ஜனாதிபதி இது விடயத்தில் தனது மறுப்பாணை அதிகாரத்தினை பயன்படுத்தலாம். அவ்வாறு பயன்படுத்தும்போது குறிப்பிட்ட மசோதாவை காங்கிரசிற்கு திருப்பியனுப்புதல் வேண்டும். காங்கிரஸ் அம் மசோதாவினை 2/3 பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் அது சட்டமாக அமுலுக்கு வரும்.

இங்கு ஜனாதிபதி காங்ஸிரசில் தலையிடுவதனைக் காணலாம். இதேபோல காங்கிரசும் ஜனாதிபதியின் கடமைகளில் தலையிடலாம். உ-ம் ஜனாதிபதி மேற்கொள்ளும் உயர் நியமனங்களுக்கும் வெளிநாட்டு ஒப்பந்தங்களுக்கும் காங்கிரசின் ஒரு சபையான செனட் சபையின் சம்மதம் அவசியமாகும்.

ஜனாதிபதி நீதித்துறையின் கடமைகளில் தலையிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல், தண்டனையைக் குறைத்தல், போன்ற பணிகளை ஜனாதிபதி மேற்கொள்கின்றார். அதேவேளை செனட்சபையின் சம்மதத்துடன் உயர்நீதிமன்ற நீதிபதிகளை ஜனாதிபதியே நியமிக்கின்றார். இதேபோல் நீதித்துறையும் ஜனாதிபதியின் செயற்பாடுகளில் தலையிடுகின்றது. ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும் நிர்வாகச் செயற் பாடுகளை அரசியல் யாப்பிற்கு முரணானது எனக் கூறி தடுக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு.

மேலும் சட்டத்துறையும், நீதித்துறையில் தலையிடுகின்றது. உயர் நீதிமன்ற நீதிபதிகள் மீது குற்றப் பிரேரணை கொண்டு வந்து பதவி நீக்கும் அதிகாரம் சட்டத்துறையான காங்கிரசிற்கு உண்டு. இதேபோல நீதித்துறையும் சட்டத் துறையில் தலையிடுகின்றது. காங்கிரஸ் இயற்றும் சட்டங்களை நீதிப் புனராய்வு செய்து செல்லுபடியற்றது என கூறுகின்ற அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு உண்டு.

இவ்வாறு பரஸ்பரம் ஒரு துறை, இன்னோர் துறையில் தலையிடக் கூடியநிலை இருப்பது வலுவேறாக்கக் கோட்பாட்டை பாதுகாப்பதோடு துறைகள் தான்தோன்றித் தனமாகச் செயற்படுவதையும் தடைசெய்கின்றது.

தடைகளும், சமநிலைகளும் என்ற கோட்பாடு அரசியலமைப்பு ரீதியாக நடைமுறையில் இருந்தாலும் தற்போது அது செயற்படும் விதம் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிளி...

(வயது- 54) என்பவரே உயிரிழந்தவரா வார்.

கடந்த புதன்கிழமை மகனுடைய புதுமனைத் திறப்பு விழாவிற்கு சித்தன் கேணியில் உள்ள ஆலயத்துக்கு சென்று படம் எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து வீட்டுக்கு திரும்பி வரும் வழியில் சங்கரத்தையில் பிறிதோர் மோட்டார் சைக்கிளுடன் இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதுண்டுள்ளது.

இதில் தலைக்கவசத்தின் கழுத்துப்பட்டி அணியாமல் இருந்ததன் காரணமாக தலையில் பலத்த காயமும் உடல் பகுதிக் காயங்களும் ஏற்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-7,60)

## வட்டுக்கோட்டை...

வராவார்.

இரு நாட்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டைச் சந்தியிலிருந்து சித்தன் கேணி செல்கிற பக்கமாக அண்ணளவாக 150 மீற்றர்கள் தூரத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குறித்த நபர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். இந்த விபத்துச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மயங்கி...

உயிரிழந்துள்ளார்.

கல்லடி ஒழுங்கை, நுணாவில் கிழக்கைச் சேர்ந்த பாலசிங்கம் பாலகாந்தன் (வயது-75) என்பவரே உயிரிழந்தவராவார்.

பத்து நாட்களாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் 3 தினங்களுக்கு முன்னர் வீடு திரும்பியுள்ளார்.

இந்நிலையில் நேற்று வெள்ளிக் கிழமை கிளினிக்குக்கு வருகை தந்து வரிசையில் காத்திருந்தபோது உதவிக்கு வந்தவரின் மடியில் சரிந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7, 60)

## என்னை...

தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

மூதூர் பட்டித்திடல் கிராமத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இனவாதியும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவருமே இம்முறை ஜனாதிபதியாக வரப்போகின்றார்.

அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. இருப்பினும் அவர்களுக்கு ஒரு செய்தியை சொல்வதற்காகவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதி...

தொடர்பான அரசாங்கத்தின் அண்மைய அறிவிப்புத் தொடர்பில் கவலை தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், அது தற்போது நடைபெற்று வரும் தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சாத்தியம் இருப்பதை ஏற்றுக் கொண்டார். (ம-7)

## அஞ்சல் மூல...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித்தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு, மூன்றாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

நேற்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், சிரேஷ்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், பொலிஸ் நிலையங்கள், விசேட அதிரடிப்படை முகாம்கள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவுகள் என்பனவற்றிலும் அஞ்சல் மூல வாக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

அஞ்சல்மூல வாக்குகளைச்செலுத்த முடியாதவர்களுக்கு எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகள் மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் வாக்களிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் மாவட்டங்களின் மாவட்டச் செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## தோட்ட...

மகேஸ்வரன் (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 2ஆம்திகதி தோட்ட வேலைக்குச் செல்லும்போது மயங்கி விழுந்துள்ளார். மயக்க நிலையிலேயே சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7)

## யாழில்...

கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வீடுகள்மற்றும் கட்டடங்களின் கூரை மேல் பொருத்தப்படும் சோலர் படல இணைப்புக்காக 42 கிலோ வாட்ஸ் வரையான இணைப்புக்களுக்கான அனுமதி சுன்னாகத்தில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிராந்திய பொறியியல் காரியாலயத்தினாலேயே வழங்கப்படுகின்றன.

அந்த அனுமதிக்காக விண்ணப்பித்த பலரது விண்ணப்பங்கள் வருடக்கணக்காகத் தேங்கிப் போயுள்ளன.

இந்நிலையில், குறுகிய காலத்தினுள் சிலருக்கு முறையற்ற விதத்தில் அனுமதிகள் வழங்கப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளதுடன் அதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பலர் ஜனாதிபதியின் குறைகேள் அதிகாரிக்கு முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் உட்பட உயரதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததை அடுத்தே ஜனாதிபதி செயலகத்துக்கு முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப்படுவதாக அம்முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முறைப்பாடுகள் தொடர்பில், ஆராய்ந்து அறிக்கையிடுமாறு ஜனாதிபதியின் செயலாளரினால் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 5588
C 3 2 6 5 8 7
அத சம்பத C 6 5 8 7
சீட்டிழுப்பு இலக்கம் 163
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1618
L 29 33 41 55 L
Double Chance 45127

மெகா பவர்
திகதி 06/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1936
E 19 50 59 65 69
Double Chance 30406

லக்கி 7 VIP
திகதி 2024.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 414
B 4 1 5 0 2 1 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3830
சீட்டிழுப்பு திகதி 06.09.2024
G 20 52 59 80
G 12664
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 0897
தனுசு 12 41 43 57 தனுசு
52908 19

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.09.2024 வெற்றி வாரம் 296
Z 0 2 3 0 9 0
71370
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,520,916.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2562 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 06.09.2024 தினம் வெள்ளி
14 28 39 74 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,236,212.00
DLB

சனிதா
திகதி 2024.09.06 வெற்றி வாரம் 4723 வர்ணம் செம்மஞ்சள்
23 38 45 74 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,114,221.20
ரூ.100,000/- 16443
DLB

சசிரி
வெற்றி வாரம் 525
சீட்டிழுப்பு திகதி 2024.09.06
பச்சை
22 28 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,181,840/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4274 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.09.06 தினம் வெள்ளிக்கிழமை
கன்னி
24 25 34 41
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,445,991.60
179779
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 40 07 14 29 72
1738
இள கபில
06.09.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 543,401,557.80
DLB

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2388
சீட்டிழுப்பு திகதி 2024.09.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,807,453.60
அத கோடிபதி ADA KOTIPATHI
07 11 26 43 X
354932
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கைதடி சந்தி செல்லும் பிரதான காப்பெற் வீதி முகப்புடன் 4 பரப்புக் காணி நிலப்பரப்பு விற்பனைக்குண்டு.

* இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
* உரும்பிராய் சந்தியிலிருந்து ½ Km தூரம்
* வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்தது.

(1881)

**077 288 0152, 077 294 1521**

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (304)

**074 17 37 684**

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மகள் தேவையெனின் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**+16476571347**
**+14372446737**
**077 240 92 76**

(1864)

## வட இந்திய யாத்திரை

### காசி அயோத்தி சீரடி பாபா யாத்திரை

**ஆரம்பம் - 10.10.2024** **நாட்கள் - 10**

காசி காளபைரவர், காசி விசாலாட்சி, அன்னபூரணி, கங்கை பூஜை, திருவேணிசங்கமம், கங்கா, யமுனா, சரஸ்வதி நதி, சீதா மண்ணுக்குள் புதையுண்ட இடம் அயோத்தி இராமர் கோயில், சீரடி பாபா, சனி சிங்கனாபூர், இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புலாணி, மதுரை மீனாட்சி இவ்வளவு ஆலயங்களையும் தரிசிக்கலாம்.

## தென்னிந்திய யாத்திரை

ஐந்து மாநிலங்களுடான யாத்திரை தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரா, கேரளா, கர்நாடகா

**ஆரம்பம் - 20.11.2024** **நாட்கள் - 15**

60 இற்கும் மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம். (312)

மேலதிக விபரங்களுக்கு:

**T.ஸ்ரீரங்கநாதன். மகன் ராஜன்**

59,3/6 செட்டியார் தெரு, கொழும்பு

**077 768 0102, 077 736 2154**

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (315)

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

இடம் : வழுக்கையாறு இந்து மயானம்

காலம் : வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி 13.09.2024

நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கு இந்து மயானத் துடன் தொடர்பான சகல பொதுமக்களும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வழுக்கையாறு இந்து மயான அபிவிருத்திச் சங்கம், செயலாளர்


(C-1132)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 239/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 265/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 376/= | |
| 1 Kg றவை | - 282/= | |
| 1 Kg சம்பா | - 224/= | |
| 1 Kg உளுத்தம் பருப்பு | - 870/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 660/= | |
| 1 Kg சோயா | - 440/= | |
| 1 Kg மல்லி | - 380/= | |
| 1 Kg லங்கா கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3390/= | ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= | ~~80/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 360/= | ~~500/=~~ |

400g Anchor

1000/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (315)

Happy Supermarket **0777 8080 30**


5ம் ஆண்டு 26ம் ஆண்டு

# நினைவஞ்சலி நினைவஞ்சலி





அமரர்

## மாணிக்கம் நாகேந்திரம்

(ஓய்வு நிலை தயால் அதியர் யாழ் பிரதம தபாலகம்)

தோற்றம் 1949.12.21 மறைவு 2019.10.19

இல்லறத்தில் இருந்தவரை நல்லறத்தைப் பேணி நிதம்
இயல்புறவே வாழ்ந்துயர்ந்த உத்தமரே!
உற்றவரை உறவினரை நண்பருடன் அயலவரை
உன்னவராய் அரவணைத்து அன்புகாட்டி
அரசபணி சேவையிலும் இறுதிவரை களங்கமின்றி
பணிபுரிந்து பாராட்டில் நனைந்தவரே!
அமைதியுடன் அரனடிக்கு அடிமைநான் வரும்வரையில்
காத்திருப்பீர் அங்குவந்து காண்பேன்

அமரர்

## நிஷாலினி நாகேந்திரம்

தோற்றம் 1981.08.21 மறைவு 1998.08.25

காலனுனைக் கவர்ந்து கால் நூற்றாண்டு போயும்
காதிலினும் ஒலிக்கிறதே உன் குரலால்
வேதனையில் வாடி நின்று வெம்புகின்ற தாயெனக்கு
ஆறுதலைத் தருவதற்கு யாருளரோ?
தினமுங்கள் திருமுகத்தை பார்த்து மனம் ஆறுதற்கு
தினசரியில் நினைவலைகள் தந்துமென்ன
மனமறிந்து சுயமுணர்ந்து மனமமைதி காண்பதற்கு
முழுமதியில் உன்வதனம் காட்டுவையோ?

அல்வாய் தெற்கு, இலகடி, அல்வாய். (314)

திருமதி ஞானகலாவதி நாகேந்திரம்


## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

* Student Visas
* Online Appointments
* இந்தியா Visas
* Online Visas - All countries
* Police Clearance
* Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1131)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.

(C-1131)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்)

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



ஆர்க். என். கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

(1878)

Hotline : 071 535 7799/ 071 973 9917


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.